# அரசியல் கற்கையும் அதன் பகுதிகளும்



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

# அரசறிவியல்

## தரம் - 12, 13

### அரசியல் கற்கையும் அதன் பகுதிகளும்

அரசியல் கற்கையானது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அபிவிருத்தி அடைந்தவொரு துறையாகவும் ஒரு பாடமாகவும் வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வளர்ச்சியின் போது அரசியல் கற்கையின் விடயப்பரப்பு, அணுகுமுறைகள், விதிமுறைகள், செய்முறைகள் என விரிவடைந்துள்ளது.

அரசியலை ஒரு கல்வியாகக் கற்றல் என்பது இரு பொருள்களை கொண்டதாகும்

- நடைமுறை அறிவாக கற்றல்
- கற்கைத்துறையாக கற்றல்

### நடைமுறை அறிவாக கற்றல்

நடைமுறை அறிவாக கற்றல் என்பது அன்றாட வாழ்க்கை அனுபவங்களின் மூலம் முறைசாரா வகையில் பெற்றுக்கொள்ளும் அறிவு ஆகும்

**உதாரணம்:** குடும்பம், அயலவர்கள், நண்பர்கள், ஊடகங்கள், அழுத்தக்குழுக்கள், அரசியல் கட்சிகள், மேடைப்பேச்சுகள் மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவாகும்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன், ஆசிரியர் - (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


# அரசறிவியல்

தரம் - 12, 13

## கற்கைத்துறையாக கற்றல்

கற்கைத்துறையாக கற்றல் என்பது அரசியல் தோற்றப்பாட்டினை அல்லது பிரச்சினையை விஞ்ஞான முறையில் கற்றல் ஆகும்

**உதாரணம்:** கோட்பாடுகள், கருதுகோள்கள், ஒப்பீட்டுரீதியான சர்வதேச அனுபவங்கள், மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புக்கள், திரட்டப்பட்ட தரவுகள், தகவல்கள், சான்றுகள் மூலம் முடிவுகளை முன்வைத்தல்




தொகுப்பு :- திரு.ந.பிரதீபன், ஆசிரியர் - (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்

## தரம் - 12, 13

### அரசியல் நிறுவனங்கள்

அரசு, அரசாங்கங்கள், பணிக்குழுமுறை, அமைச்சரவை, நீதித்துறை, பாராளுமன்றம், உள்ளூராட்சி போன்றனவாகும். இவற்றின் ஆரம்பம், வளர்ச்சி, அமைவுச்சேர்க்கை, அதிகாரம், பொறுப்புக்கள், நிலைமாற்றங்கள், வேறுபாடுகள், அந்நிறுவனங்களுக்கும் பிரஜைகளுக்குமுள்ள தொடர்பைக் கற்றல் ஆகும்.

### அரசியல் நடைமுறைகள்

அரசியலானது நடைமுறை ஊடகத்தை மையமாகக் கொண்டு நிறுவனமயப்படுத்தப்பட்ட அரசியல் சமூகத்தின் நிலைப்புத்தன்மையாகும்

உதாரணம்: பாராளுமன்ற இருப்புக்கான நடைமுறைகளாக அரச ஜனநாயகம், தேர்தல் செயன்முறை, சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்கள், பெரும்பான்மையினரின் விருப்பம், மக்கள் இறைமையை ஏற்றுக்கொள்ளல் என்பவற்றை கற்றல் ஆகும்

### ஆட்சி

ஆட்சி என்பது அரசறிவியலை ஆய்வுக்குட்படும் அரசியலில் காணப்படும் பிரதான பிரிவாகும். ஆட்சி செயன்முறையில் இடம்பெறும் பணிகளாவன

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன், ஆசிரியர் - (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## ஆட்சி செயன்முறையில் இடம்பெறும் பணிகள்

- சமூகத்தின் சிறப்பான இழுப்பிற்கும் மோதல்களை தீர்ப்பதற்கும் சட்டங்களை ஆக்குதல்
- நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு கொள்கைகளை உருவாக்குதலும் அவற்றை அமுலாக்குவதும்
- அரச கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான அவசியமான பொதுத்துறை நிர்வாகப் பணிகள்
- நாடுகளுக்கிடையிலான தொடர்புகளை முகாமை செய்தலும் பேணிச்செல்லலும்

Copyright www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்

## தரம் - 12, 13

### அரசியல் நடத்தை

அரசியல் நடத்தை என்பது ஒரு அரசியல் சமூகத்தில் மனிதர்களின் அரசியல் விருப்பு, வெறுப்புக்களையும், செயற்பாடுகளையும் விபரிக்கும் அரசியல் எண்ணக்கருவே ஆகும். அரசியல் நடத்தைகள் அரசு அரசியலில் ஈடுபடுதல் தேர்தலில் வாக்களித்தல் அவ்வாறு வாக்களிக்காமை தேர்தல் செயற்பாட்டில் ஈடுபடல் அவ்வாறு ஒதுங்கியிருத்தல், அரசியல் கட்சிகளின் உறுப்பினராக இருத்தல், இல்லாதிருத்தல், நாளாந்த அரசியல் நிகழ்வுகளில் ஆர்வம் காட்டல் அல்லது காட்டாமை போன்ற நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய செயற்பாடே ஆகும்.

### அரசியல் கருத்தியல்கள்

அரசியல் கருத்தியல்கள் எனப்படுவது சமூகத்தின் அரசியல் அறிவு, தனிநபர்கள், சமூகக்குழுக்களின் அரசியல் செயற்பாடு, அரச நிறுவனங்களின் தன்மை மற்றும் பணிகளை தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒருங்கமைத்த அரசியல் எழுத்துகளின் தொகுதியே ஆகும்.

தற்கால உலகில் அரசியல் நிகழ்வுகளையும் அரச கொள்கைகளையும் உருவமைக்கும் பல அரசியல் கருத்தியல்கள் காணப்படுகின்றன. அவையாவன

**உதாரணம்:** தாராண்மைவாதம், சமவுடைமைவாதம், குடியரசுவாதம், சமூக ஜனநாயகம், பாசிசவாதம், தேசியவாதம், மதசார்பின்மை வாதம், பெண்ணியல் வாதம் என்பனவாகும்

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன், ஆசிரியர் - (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்

## தரம் - 12, 13



### வினாக்கள்

1. அரசியலை கல்வியாக கற்றலின் இரு பகுதிகளும் யாவை?

2. அரசியலை நடைமுறை அறிவாக கற்கும் முறைசாரா வழிமுறைகள் இரண்டு தருக?

3. அரசியல் நிறுவனங்கள் இரண்டு தருக?

4. அரசியல் கருத்தியல்கள் இரண்டினை குறிப்பிடுக?



அரசியல் கற்கைகளின் பகுதிகளை ஆராய்க

தொகுப்பு :- திரு.ந.பிரதீபன், ஆசிரியர் - (யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.சி.உமாகாந்தன், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk